**<u>செய்தி வெளியீடு</u>**

**செய்தி வெளியீடு எண். 67/2024 நாள் : 27.09.2024**

**மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர், திரு.கே.என்.நேரு அவர்கள் 27.09.2024 அன்று கோயம்பேட்டிலுள்ள 45 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர், திரு.கே.என்.நேரு அவர்கள் 27.09.2024 இன்று கோயம்பேட்டிலுள்ள 45 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட மூன்றாம் நிலை எதிர் சவ்வூடு பரவுதல் (TTRO) சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் 342 கழிவுநீரேற்று நிலையங்கள் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு வருகிறது. கோயம்பேட்டில் செயல்பட்டு வரும் நாளொன்றுக்கு 45 MLD உற்பத்தித் திறன்கொண்ட மூன்றாம் நிலை எதிர் சவ்வூடு பரவுதல் முறை (TTRO) சுத்திகரிப்பு நிலையத்தில் அண்ணா நகர், கோடம்பாக்கம், அம்பத்தூர், வளசரவாக்கம் ஆகிய பகுதிகளிலிருந்து சேகரிக்கப்படும் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு தொழிற்சாலைகளின் பயன்பாட்டிற்காக சென்னையை அடுத்த 60 கிலோமீட்டர் தொலைவில் உள்ள சிப்காட் நிறுவனத்திற்கு சொந்தமான இருங்காட்டுக்கோட்டை, பிள்ளைப்பாக்கம், வல்லம்வடகல். ஸ்ரீபெரும்புதூர் மற்றும் ஒரகடம் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு தினசரி

வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையத்தில் சுத்திகரிக்கப்படும் நீரின் தரம் நிர்ணயிக்கப்பட்டுள்ள தரத்தின் அடிப்படையில் உள்ளதா என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்.

மேலும், இந்நிலையத்தில் சுத்திகரிக்கப்படும் நீரின் தரம் சரியான அளவில் இருப்பதால், இந்நீரினைக் கொண்டு வாகனங்கள் மற்றும் இரயில் பெட்டிகளை சுத்தப்படுத்துதல், வணிக வளாகங்கள், திரையரங்குகள், மருத்துவமனைகள், உணவகங்கள் ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்டு வரும் மையப்படுத்தப்பட்ட குளிருட்டும் அமைப்புகளில் (Centralised Cooling System) இந்நீரை பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டுமெனவும் கட்டுமானப் பணிகளுக்கும் இங்கு சுத்திகரிக்கப்படும் நீரினை பயன்படுத்துவதற்கான நடவடிக்கையினையும் மேற்கொள்ள வேண்டுமெனவும் மாண்புமிகு அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இந்நிலையத்தின் செயல்பாடுகளை முழுவதுமாக ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு சுத்திகரிக்கப்படும் குடிநீரின் தரத்தினை குடித்துப் பார்த்து பரிசோதித்தார். இவ்வளாகத்தை தூய்மையாக பராமரிப்பதோடு, பாதுகாப்பினையும் உறுதிசெய்ய வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர், டாக்டர்.டி.ஜி.வினய், இ.ஆ.ப., செயல் இயக்குநர், திரு.செ.சரவணன், இ.ஆ.ப., பொறியியல் இயக்குநர், திரு.மி.ஜெய்கர் ஜேசுதாஸ், தலைமைப் பொறியாளர், திரு.ஆர்.கந்தசாமி, மேற்பார்வைப் பொறியாளர், திருமதி.சி.ஜாய்ஸ் சுமதி, செயற்பொறியாளர், திருமதி.பி.மைதிலி மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள

CHN_Metro_Water CMWSSB chennaimetrowater cmwssb.tn.gov.in